நல வாரியங்கள் – அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்களின் நலத் திட்டங்கள் தொழிலாளர்களை விரைவாக சென்றடைவதைக் கண்காணிக்க உருவாக்கப்பட்ட மாவட்ட அளவிலான கண்காணிப்பு குழுக்கள் – திருத்தியமைத்தல் – ஆணைகள் வெளியிடப்படுகிறது.

---

<u>தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (ஐ1)த் துறை</u>

அரசாணை (டி) எண். 149

நாள்: 21 .09.2015.
மன்மத, புரட்டாசி – 4,
திருவள்ளுவர் ஆண்டு, 2046.
<u>படிக்க:-</u>

1. அரசாணை (டி) எண்.414, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(ஐ1) துறை, நாள் 01.06.2007.
2. அரசாணை (டி) எண்.199, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ஐ1) துறை, நாள் 21.05.2012.
3. தொழிலாளர் ஆணையரின் கடிதம் எண்.W4/28611/2015, நாள்.16.07.2015.

---

<u>ஆணை:–</u>

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தொழிலாளர் துறையின் கீழ் இயங்கும் அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களில் பதிவு செய்துள்ள உடலுழைப்புத் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது வாரிசுகளுக்கு வழங்கப்படும் நலத் திட்டங்கள் தொழிலாளர்களை விரைந்து சென்றடைய, ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியர் தலைமையில் அரசு அலுவலர்கள், தொழிலாளர் பிரதிநிதிகள் மற்றும் வேலையளிப்போர் பிரதிநிதிகளை உறுப்பினர்களாக கொண்ட கண்காணிப்பு குழுவினை நியமனம் செய்து ஆணையிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், அரசு பிரதிநிதிகள் மற்றும் நிர்வாகத்தரப்பு பிரதிநிதிகளாக முறையே 7 பிரதிநிதிகளும், தொழிற் சங்கத் தரப்பில் 5 பிரதிநிதிகளும் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டு, மாவட்ட கண்காணிப்புக் குழு திருத்தியமைக்கப்பட்டது. மேலும், திருத்தியமைக்கப்பட்ட கண்காணிப்புக் குழுவின் அலுவல்சாரா உறுப்பினர்களின் பதவிக்காலத்தினை மூன்று ஆண்டுகளாக நிர்ணயம் செய்தும் ஆணை வெளியிடப்பட்டது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், தொழிலாளர் ஆணையர் அரசுக்குப் பரிந்துரைத்த கருத்துருவினை கவனமுடன் பரிசீலித்து அரசு அதனை ஏற்றுக் கொண்டுள்ளது. அதன்படி, மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணை மூலம் உருவாக்கப்பட்டு, மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணை மூலம் திருத்தியமைக்கப்பட்ட மாவட்ட கண்காணிப்புக்

குழுவானது கீழ்க்காணும் வகையில் தற்போது திருத்தியமைக்கப்பட்டு ஆணைகள் வெளியிடப்படுகிறது:–

அரசு பிரதிநிதிகள் (7 நபர்கள்)

1. தலைவர் – மாவட்ட ஆட்சித் தலைவர்
2. தொழிலாளர் அலுவலர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) – உறுப்பினர்–செயலர்
3. திட்ட அலுவலர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை – உறுப்பினர்
4. மாவட்ட வருவாய் அலுவலர் – உறுப்பினர்
5. தொழிலாளர் இணை ஆணையர்/ தொழிலாளர் துணை ஆணையர் – உறுப்பினர்
6. துணை இயக்குநர், கட்டட மற்றும் கட்டுமான பணி (தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் ) – உறுப்பினர்
7. மாவட்ட சமூக நல அலுவலர் – உறுப்பினர்

நிர்வாகத் தரப்பு பிரதிநிதிகள் (7 நபர்கள்)

1. சேம்பர் ஆஃப் காமர்ஸ் – உறுப்பினர்
2. ஓட்டல் உரிமையாளர் சங்கம் – உறுப்பினர்
3. ஐந்து இதர பெரிய தொழில்களின் நிர்வாகத் தரப்பினர் – உறுப்பினர்

தொழிற்சங்கப் பிரதிநிதிகள்

1. அண்ணா தொழிற்சங்கப் பேரவை (ATP)
2. இந்திய தொழிற்சங்கங்களின் மத்திய அமைப்பு (CITU)
3. அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸ் (AITUC)
4. இந்திய தேசிய தொழிற்சங்க காங்கிரஸ் (INTUC),
5. அனைத்திந்திய மத்திய தொழிற்சங்க மையம் (A.I.C.C.T.U)
6. பாரதிய மஸ்தூர் சங்கம் (B.M.S)
7. இந்திய குடியரசு கட்சி

4. இக்கண்காணிப்புக் குழுவானது மாதம் ஒரு முறை கூடி கீழ்க்கண்ட நேர்வுகள் குறித்து விவாதிக்கும்.

(i) 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நலச்சட்டத்தின்படி பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களை இனம் காணுதல் மற்றும் புள்ளி விவரம் பராமரித்தல்.

(ii) தற்போது புலம் பெயர்ந்த கட்டுமானத் தொழிலாளர்களை (Migrant Construction Workers) இனம் காணுதல் மற்றும் வாரியத்தில் பதிவு செய்தல்.

(iii) உரிய தொழில் புரியும் தொழிலாளர்களை மட்டும் பதிவு செய்தல்.